சுற்றுநிருபம் - 02/2014(1)

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாணம்
2022.10.21

வடமாகாணத்திலுள்ள சகல கூட்டுறவு சங்கங்களின் தலைவர்களுக்கும்.

**கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்று நிருபம் 02/2014 இற்கமைவாக நேர்முகப்பரீட்சை சபையினால் புள்ளி வழங்குவதற்கு கடைப்பிடிக்க வேண்டிய முறைகளும் புள்ளிகளும் திருத்தம் செய்தல் தொடர்பாக.**

பதவி நியமனங்களுக்கான புள்ளியிடல் முறைமை கீழ்க்குறிப்பிட்டவாறு அமைய வேண்டுமென ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதற்கு முன்னர் நேர்முகப்பரீட்சைக் குழுவினால் புள்ளியிடல் தொடர்பாக வெளியிடப்பட்ட 02/2014 ஆம் ஆண்டு சுற்று நிருபத்தின் இலக்கம் 21 இத்தால் இரத்து செய்யப்படுகின்றது

இச் சுற்றுநிருபமானது 2022.11.01 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

## புள்ளியிடும் முறைமை

| இல. | விடயம் | வெளிவாரி | உள்வாரி |
|---|---|---|---|
| 01. | அடிப்படை கல்வித்தகைமை (40 புள்ளிகள்) | 40 | 40 |
| 02. | மேலதிக கல்வித்தகைமைகள் (35 புள்ளிகள்)<br><br>கோரப்பட்ட அடிப்படைத் தகைமையை விட மேலதிக கல்வித்தகைமை | | |
| | 2.1.கூட்டுறவு ஊழியர் சாதாரணதரம் அல்லது க.பொ.த(சா.த) | 05 | 05 |
| | 2.2.கூட்டுறவு ஊழியர் உயர்தரம் அல்லது க.பொ.த.(உ.த) | 05 | 05 |
| | **2.3.**கூட்டுறவு பயிற்சி டிப்ளோமா அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட துறைசார் டிப்ளோமா | 05 | 05 |
| | **2.4.**துறைசார்பட்டம் அல்லது அதற்கு சமனானது<br>2.5.ஏனைய சான்றிதழ்கள் (சமூக நலன் செயற்பாடுகள்) சான்றிதழ்களுக்கு 01 புள்ளி வீதம் ஆகக் கூடியது 05 புள்ளிகள் | 05<br>05 | 05<br>05 |
| | **2.6.** மேலதிக துறைசார் சேவைத்தகைமைகள் (இரண்டு புள்ளிகள் வீதம் ஆகக் கூடியது 05 வருடங்களுக்கு 2x5) | 10 | 10 |
| 03. | சேவை அனுபவம் - (15 புள்ளிகள்) | | |

| | | | |
|---|---|---|---|
| | 1.கூட்டுறவுத்துறை<br>ஆண்டிற்கு 1.5 புள்ளிகள் வீதம் ஆகக்கூடியது 10 வருடங்களுக்கு | 15 | 15 |
| 04 | **வதிவிடத்தகைமைகள் – (05 புள்ளிகள்)** | - | - |
| ገa | கிராம உத்தியோகத்தரிடமிருந்து 06 மாதத்திற்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவிடச் சான்றிதழ் | - | - |
| | சங்க எல்லைப்பரப்பிற்குள் வதிவிடமிருப்பின் | 05 | - |
| | சங்கம் எல்லைப்பரப்பிற்குள் அல்லாது சங்கம் அமைந்துள்ள மாவட்டத்தில் வதிவிடமிருப்பின் | 03 | - |
| | சங்கம் மாவட்டத்திற்குள் அல்லாது சங்கம் அமைந்துள்ள மாகாணத்திற்குள் வதிவிடமிருப்பின் | 02 | - |
| 05 | **கூட்டுறவு சேவைச் செயற்பாடு மதிப்பீடு (05 புள்ளிகள்)** | - | 05 |
| 06 | **நேர்முகம்- (05 புள்ளிகள்)**<br>(ஆளுமை, ஒழுக்கம், தொடர்பாடல்) | 05 | 05 |
| | **மொத்தப் புள்ளிகள்** | 100 | 100 |

இப் புள்ளியிடல் திட்டத்தில் அடிப்படைத் தகைமையில் ஒரு குறிப்பிட்ட கல்வித் தகைமைக்கு புள்ளிகள் வழங்கப்பட்டிருப்பின் மேலதிக தகைமையில் அவற்றுக்கு புள்ளிகள் வழங்கப்படலாகாது என்பதுடன் அடிப்படை கல்வித் தகைமையாகக் கருதப்படும் கல்வித்தகைமைக்கு சமனான வேறு தகைமைகள் அல்லது அவற்றிலும் உயர்வான கல்வித்தகைமைக்கே இல.2ல் புள்ளிகளிடப்படல் வேண்டும்.

அடிப்படைத் தகைமையாக துறைசார் சேவைக்கால அனுபவத்தினைக் கொண்டிருக்கும் போது அடிப்படை தகைமைக்கான துறைசார் சேவைக் காலத்தினை கழித்து மீதித் துறைசார் சேவைக்காலத்திற்கு இல 2.6 இல் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக துறைகள்சார் சேவைத்தகைமைக்கு வருடத்திற்கு 02 புள்ளி வீதம் ஆகக்கூடியது 05 வருடங்களுக்கு 10 புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.

மொத்த சேவைக் காலத்தில் அடிப்படை துறைசார் சேவைக் காலம் மற்றும் மேலதிக துறைசார் சேவைக் காலம் என்பவற்றை கழித்து மீதி சேவைக்காலத்திற்கு இல.03ல் சேவை அனுபவத்திற்கு வருடத்திற்கு 1.5 புள்ளிகள் வீதம் ஆகக்கூடியது 10 வருடங்களுக்கு 15 புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.

உதாரணம்

104/12 கணக்காளர் பதவிக்கான நேர்முகத்தேர்வினை கருதினால் 01/2021 கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்தில் இப் பதவிக்கான கல்வித் தகைமையாக **கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கணக்குப்பதிவாளர்/ கணக்கு/கணக்காய்வு எழுதுநர் பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். / கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப் பதவியில்/ கணக்கு / கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.** என கோரப்பட்டிருப்பின்,

**104/12** கணக்காளர் பதவிக்கு ஒருவர் விண்ணப்பித்திருப்பின் அவரது மொத்த சேவைக்காலம் 15 வருடங்களாகவும் கணக்குப்பதிவாளராக 13 ஆவது சம்பளத் திட்டத்தில் 05 ஆண்டுகளாகவும் கடமையாற்றியிருப்பின்.

குறித்த பணியாளருக்கு அடிப்படைத் தகைமைக்கு இரண்டு (02) ஆண்டு காலத்தினை கழித்து மீதி மூன்று (03) ஆண்டுகளுக்கு மேலதிக துறைசார் சேவைத் தகைமையில் இரண்டு (02) புள்ளிகள் வீதம் ஆறு (06) புள்ளிகளும் மீதி 10 வருடங்களுக்கு சேவை அனுபவத்திற்கு ஒன்று தசம் ஐந்து (1.5) புள்ளி வீதம் பத்து (10) வருடங்களுக்கு பதினைந்து (15) புள்ளிகளும் வழங்கப்பட வேண்டும்.

2022.09.26 ஆம் திகதிய ஆணைக்குழுவின் தீர்மானத்தின்படியானது.

T. Uel

த.உமா
செயலாளர்

த. உமா
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாணம்